1987 நவம்பர் 13]

கீரிப்பாறையில் தேயிலை தொழிற்சாலை.

104—(*வினா எண் 14946)—திரு. கோ. பெருமாள் பிள்ளை: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம், கீரிப்பாறையில் கூட்டுறவுத் துறையின் மூலம் தேயிலை தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

(முற்பகல் 10-50)

திரு. கோ. பெருமாள் பிள்ளை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் காட்டுப் பகுதிகளில் ரப்பருக்கு அடுத்தபடியாக தேயிலையைச் சிறு அளவிலே அங்கேயுள்ளவர்கள் பயிரிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தேயிலையைப் பக்குவப்படுத்தி விநியோகம் செய்கின்ற அளவிற்கு அதைத் தயார் செய்வதற்கு அங்கே வசதி இல்லாத காரணத்தால் கூட்டுறவுத் துறையின் மூலமாக ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டிருப்பதாக அதிகாரிகளின் மூலமாக அறிந்தேன். ஆகவே அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து குமரி மாவட்டம் தொழிலில் பின்தங்கிய மாவட்டம் என்பதைக் கருத்திற்கொண்டு அங்கே ஒரு தேயிலைத் தொழிற்சாலையை அமைக்கமுன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1986 ஆம் ஆண்டு கூட்டுறவு அமைப்பிலே ஒரு தேயிலைத் தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டும் என்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு ஆய்வு செய்து பார்த்ததில், அங்கே பயிரிடப்படுகிற தேயிலையின் தரம் குறைந்திருப்பதால் அங்கே வேறு பயிர்களைப் பயிரிடுவதற்கான நடவடிக்கைகளை விவசாயிகள் எடுத்து விட்டார்கள். இந்தத் தொழிற்சாலையை அமைத்தால் அது வெற்றிகரமாக

வராது என்று தெரிவித்த காரணத்தால் இப்போது கைவிடப் பட்டிருக்கிறது. எனவே அங்கேயிருக்கின்ற நிலைமைகளைச் சட்டமன்ற உறுப்பினர் பார்த்து அது உண்மைதானா என்பதைத் தெரிந்து கடிதம் கொடுத்தால் அதற்கேற்ப நடவடிக்கை எடுக் கலாம்.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை தமிழில் ஒளிபரப்பு செய்தல்.

105—(*வினா எண் 203)—திரு. மா. சின்னராசு: மாண்புமிகு, சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எல்லா மாவட்டங்களிலும் தொலைக் காட்சியில் தமிழ் நிகழ்ச்சிகள் ஒளிபரப்புக்கு ஏற்பாடு செய்யும்படி மத்திய அரசைத் தமிழக அரசு கேட்டுக்கொண்டுள்ளதா ?

(ஆ) இதன் மீது மத்திய அரசு நடவடிக்கை குறித்து தகவல் ஏதும் வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : தமிழ்நாட்டில் உள்ள எல்லா குறைந்த சக்தி கொண்ட தொலைக்காட்சி அஞ்சல் நிலையங்கள் அனைத்தையும் சென்னை தொலைக்காட்சி நிலையத்துடன் மைக்ரோ வேவ் மூலம் இணைக்க வேண்டும் என்று மத்திய அரசை மாநில அரசு கோரியுள்ளது. தற்போது கொடைக்கானல் தொலைக்காட்சி நிலையம் சென்னை தொலைக்காட்சி நிலையத்துடன் மைக்ரோ வேவ் மூலம் இணைக் கப்பட்டுள்ளது.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் நீலகிரி போன்ற மாவட்டங்களில் சென்னை தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பார்க்க முடியாத நிலை இருக்கிறது. இது போன்ற மைக்ரோ வேவ் மூலம் இணைக்கப் படாத மாவட்டங்களை மைக்ரோவேவ் மூலம் இணைக்க வேண்டும் என்று வலியுறுத்துவதோடு சென்னையில் ஒளிபரப்பப் படும் தமிழ் நிகழ்ச்சிகளை தமிழக மக்கள் பார்க்க வசதி ஏற் படுத்திக் கொடுக்க மத்திய அரசாங்கத்தை மாநில அரசாங்கம் வலியுறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.